# ஒரு வித்தியாசமான சி.டி.

கீதா அர்ஜுன்






சென்னை மயிலாப்பூரில் ஜட்ஜ் ஜம்புலிங்கம் தெருவில் ஓஜஸ் பவுண்டேஷன் என்று ஓர் அமைப்பு. ஓஜஸ் என்றால் சமஸ்கிருதத்தில் உயிர் சக்தி என்று அர்த்தம். வேதத்தை அடிப்படையாக வைத்து உடல் நலத்தையும், மன நலத்தையும் பேணிக் காக்க முடியும் என்பது ஓஜஸ் அமைப்பினரின் நம்பிக்கை. இந்த அமைப்பு, சமீபத்தில் ஒரு சி.டி/கேஸட் வெளியிட்டிருக்கிறது. கர்ப்பமான பெண்களுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்த சி.டி.

கர்ப்பிணிப் பெண்களுக்கு சி.டி.யா? விநோதமாக இருக்கிறதே என்று ஓஜஸ் அமைப்பின் துணை நிறுவனரும், சென்னை நகரின் புகழ் பெற்ற மகப்பேறு மருத்துவமனை டாக்டர் கீதா அர்ஜுனிடம் கேட்டோம்.



"அம்மாவின் வயிற்றுக்குள் இருக்கும் போதே குழந்தை சில விஷயங்களைப் புரிந்து கொள்ளும். அம்மா சந்தோஷமாக இருந்தால் குழந்தையும் சந்தோஷமாக இருக்கும். அம்மா, அப்பாவின் குரலை வித்தியாசம் அறிந்து கேட்டுத் தெரிந்து கொள்ளும். நல்ல இசையைக் கேட்டால் புரிந்து கொள்ளும். வெளியுலகத்தைக் கண்டு விட வேண்டும் என்கிற ஆசையில் குழந்தை ஒரு பக்கம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்க, அம்மாக்களோ மன நிம்மதி இல்லாமல் பரபரப்பாக இருப்பார்கள். கர்ப்பமான காலத்தில் பெண்கள் கேட்பதற்காகவென்றே விசேஷமான மந்திரங்கள் வேதத்தில் உண்டு. அந்த மந்திரங்களைக் கேட்கும் போது தாய்க்கு நிம்மதி ஏற்படுகிறது. அத்தோடு தாய்க்கும், குழந்தைக்கும் நெருக்கமான உறவு ஏற்படக்கூடிய சூழ்நிலையும் உருவாகிறது. அதற்காகத்தான் இந்த சி.டி.யை வெளியிட்டிருக்கிறோம்" என்று விளக்கமாக எடுத்துச் சொன்னார் டாக்டர் கீதா அர்ஜுன்.



ஸ்ரீதத்வமசி தீட்சித்

இன்னும் சில மாதங்களில் பிறக்கப் போகும் தன்னுடைய குழந்தை அழகாக, அறிவு நிறைந்ததாக, நல்ல உடல் வளர்ச்சி கொண்டதாக இருக்க வேண்டும் என்கிற ஒரு தாயின் பிரார்த்தனைதான் இந்த சி.டி.யில் இடம் பெற்றுள்ள வேத மந்திரங்களின் அர்த்தம். "இறைவா! என் கருப்பையை பலமாக்கு. அதில் உள்ள என்னுடைய குழந்தைக்கு பலத்தினைக் கொடு. நல்ல, தைரியமான குழந்தையாக அந்தக் குழந்தை பிறக்க வேண்டும். என் குழந்தைக்கும், குழந்தையின் தகப்பனாருக்கும் ஆசீர்வாதம் அருள்!" என்று ஒரு தாய் இறைவனிடம் வேறு வேறு வகையில் பிரார்த்தனை செய்வதுதான் இந்த சி.டி.யில் உள்ள வேத மந்திரங்களின் மையக் கரு.

"அர்த்தம் புரியவில்லை என்றாலும் இந்த வேத மந்திரங்களைக் கேட்டாலே முழுப் பயனும் கிடைக்கும். வேத மந்திரங்கள் கொண்ட இந்த சி.டி.யை காலையிலும், மாலையிலும் அமைதியான சூழ்நிலையில் பதினைந்து நிமிடங்கள் கேட்டாலே போதும். அம்மாவும், குழந்தையும் சந்தோஷமாகி விடுவார்கள்" என்கிறார் இந்த சி.டி உருவாகக் காரணமாக இருந்த ஸ்ரீ தத்வமசி தீட்சித். ஓஜஸ் அமைப்பை நிறுவியவர். வேதத்தைக் கரைத்துக் குடித்தவர். காயகல்பா என்கிற பெயரில் ஒரு மருத்துவ மையத்தையும் நடத்தி வருகிறார்.

"நம் எல்லா பிரச்னைக்குமான தீர்வு, வேதத்தில் உண்டு. மனிதனின் உடல் நலம், மனநலம், ஆன்மநலம் பற்றி எக்கச்சக்கமாக எடுத்துச் சொல்கிறது. வேதம் அதனை அடிப்படையாக வைத்து மாரடைப்பு, அல்சர், ரத்தக் கொதிப்பு போன்ற நோய்களையும் குணப்படுத்தும் வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறது ஓஜஸ் அமைப்பு" என்கிறார் ஸ்ரீ தத்வமசி தீட்சித்.

கர்ப்பிணிகளுக்கான ஒரு சி.டி அமைத்தது மாதிரி மாரடைப்பு, அல்சர், ரத்தக் கொதிப்பு நோய் கண்டவர்களுக்கென தனித்தனி சி.டி.க்களை வெளியிடப் போகிறதாம் ஓஜஸ் பவுண்டேஷன்.

– ஏ. ஆர். குமார்

படங்கள் : புதூர் சரவணன்.